
தென்பாண்டி நாட்டுப் படைப்பாளர்களின்

# சமூகச் சிந்தனைகள்




பதிப்பாசிரியர்

செம்மூதாய் சதாசிவம்

முனைவர் சு.கௌசல்யாதேவி

முனைவர் வெ.ஹரிதாஸ்

முனைவர் கோ.சங்கரவீரபத்திரன்

நெல்லை
தொகுதி 2

தென்பாண்டி நாட்டுப் படைப்பாளர்களின்

# சமூகச் சிந்தனைகள்



செம்மூதாய் பதிப்பகம்
A3, அபிராமி நிவாஸ்
நெ. 43, வால்மீகி தெரு
கிழக்குத் தாம்பரம்
சென்னை 600 059
கைபேசி : 9444 200 369
semmoodhai@gmail.com

ISBN 978-93-81006-05-4

உ.ரு. 400/-

நெல்லை
தொகுதி 2

தென்பாண்டி நாட்டுப் படைப்பாளர்களின்
சமூகச் சிந்தனைகள்

ISBN 978-93-81006-05-4

நெல்லை
தொகுதி 2

தென்பாண்டி நாட்டுப் படைப்பாளர்களின்

# சமூகச் சிந்தனைகள்



பதிப்பாசிரியர்

செம்மூதாய் சதாசிவம்
முனைவர் சு.கௌசல்யாதேவி
முனைவர் வெ.ஹரிதாஸ்
முனைவர் கோ.சங்கரவீரபத்திரன்

# 114. பாரதி படைப்புகளில் சமூகச் சிந்தனைகள்

**முனைவர் மா. பாப்பா**
*உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்*
*பாத்திமாக் கல்லூரி*
*மதுரை.*

## முன்னுரை

'ஊருக்கு நல்லது சொல்வேன் உண்மை தெரிந்து சொல்வேன்' என்று உறுதி பூண்டிருந்த மகாகவி பாரதியார், தன் உள்ளத்து உணர்வுகளை எல்லாம் தம் படைப்புகளில் வெளிப்படுத்துகிறார். மேலும் இச்சமூகத்தின் மீது அக்கறைக் கொண்ட பாரதி நாட்டுப்பற்று, ஒருமைப்பாடு, நம்பிக்கை, பெண்ணியச் சிந்தனை, சாதி வேறுபாடு, ஆகியவற்றைத் தம் படைப்புக்களில் ஆய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

## நாட்டுப்பற்று

பாரதியார் பிறந்த பொன்னாட்டின் மீது அளவுகடந்த பற்றுக் கொண்டிருந்தார். ஆனால் நாட்டுப் பற்று மக்களிடம் மழுங்கிக்கிடப்பதைக் கண்ட பாரதி, வெள்ளை ஏகாதி பத்தியத்தை விரட்டியடிக்க வேண்டுமானால், நாட்டில் உள்ள மக்கள் ஒன்று சேர்ந்து போராட வேண்டும் சுதந்திர இயக்கம் பரந்த விரிந்து ஒரு மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்று உணர்ந்தார். அதற்கு மக்கள் நாட்டின் பெருமையை உணர வேண்டும் என எண்ணினார். அதனால் பாரத நாட்டின் பெருமையை உணர்த்த,

*'பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்*
*பாரத நாடு"*

என்று உரிமையோடு பாடுவதுடன், இவ்வுலகிலே சிறந்த நாடு நம் பாரத நாடு தான் என்றார். இந்நாட்டில் தான் என் தாயும் தந்தையும் பிறந்து மகிழ்ந்து வளர்ந்தார்கள் என்றும், நம் பாரத நாடு பழமையானது. இந்நாடு பல்வேறு வளம் நிறைந்தது என்பதை,

*"வேறு பல பொருளும் குடைந் தெடுப்போம்"*

என்று கூறுகிறார். நம் பாரத நாடு நீர் வளம், நில வளம், மலை வளம் மிக்கது என்று தன் கவிதையில் எடுத்தியம்புவதுடன்,

*"மன்னும் இமயமலை எங்கள் மலையே!*
*மாநில மீதிது போற்பிறி தில்லையே!*
*இன்னரு நீர்க்கங்கை யாறெங்கள் யாரே!*
*இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே!"*



என்று இமயத்தையும் கங்கையும் முறையே 'எங்கள் ஆறு', 'எங்கள் மலை' என்று உரிமையுடன் பாடுவதுடன் மொழி வழியாகப் பாரதம் முழுமையையும் தாய் நாடாகக் கொள்வதன் மூலம் மக்கள் மனதில் நாட்டுப் பற்றினை ஊட்டியதை அறிய முடிகிறது.

## ஒருமைப்பாடு

சமுதாயத்தில் பல குறைகள் மலிருந்திருந்த காலத்தே வாழந்த பாரதி சமுதாய குறைபாடுகளை நீக்க வேண்டும் என எண்ணி, அதற்கான காரணங்களைக் கண்டறிந்தார். மக்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி இருப்பதே காரணம் என உணர்ந்து மக்களிடம் ஒருமைப்பாட்டுணர்வினை வளர்க்க முனைந்து,

*"முப்பது கோடி முகமுடையாள் உயிர்*
*மொய்புற வொன்றுடையாள் - இவள்*
. . . . . . . . . . . . . . . . . . . . .
*ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்*
*ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு"*

என்று ஒற்றுமையை வலியுறுத்தினார். மேலும் மக்கள் தங்களுக்குள் வேற்றுமை நீங்கி ஒற்றுமை மலர்வதுடன் நில்லாமல், பிற மாநிலங்களுடன் ஒற்றுமையுடன் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ வேண்டும் என்பதை,

*"சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு*
*சேர்த்துத் தந்தங்கள் பரிசளிப்போம்"*

என்று பிற மாநிலங்களுடன் ஒருமைப்பாட்டுடன் இருப்பதைத் தம் கவிதையில் வலியுறுத்துகிறார்.

## சாதி வேறுபாடு

இந்தச் சமுதாயத்தில் சாதி என்ற விசச் செடி வளர்வதைக் கண்டு மனம் வருந்தினார். மக்கள் அனைவரும் தொழிலின் பெயரால் பிரிக்கப்பட்டு, இனத்தின் பெயரால் ஒன்றுப்பட்டு, பிறப்பினால் இவன் உயர்ந்தவன் இவன் தாழ்ந்தவன் என்ற ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கி, மக்கள் ஒற்றுமை குலைத்து வாழ்வதைக் கண்ட பாரதி,

*"சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்*
*தாழ்வென்றும் - மேலென்றும் கொள்வார்"*

என்ற பாடலால் விளக்குவதுடன், பாப்பா பாட்டில் சாதிகள் இல்லையடி பாப்பா என்று சிறுவர்களின் மனதில் சாதி ஒழிப்பைப் பற்றிய எண்ணத்தை ஆழமாக பதிய வைத்தார். வண்ணங்கள் வேற்றுமைப்பட்டாலும் அதில் மானுடர் வேற்றுமை இல்லை. சாதிப் பிரிவிகள் வேண்டாம். அன்பு தன்னிற் செழித்திடும் வையம் எனக் குரல் எழுப்புகிறார். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் சாதியை ஒழித்து எல்லாரும் ஓர் குலம் தெய்வம் ஒன்றே என்ற பொதுவுணர்வு கருத்தை எடுத்தியம்புகிறார்.